தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 9-3-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண்மைப் பல்கலைக்கழகம் - தொழில் முனைவோர்க்கு தொழில் கடன் வழங்குதல்.

வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழத்தில் இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்துறையின் ஆதரவோடு தொழில் நுட்ப வணிக உறுதுணை மையம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது இங்கு சுமார் 150 தொழில் முனைவோர் உறுப்பினராக உள்ளனர். தொழில் முனைவோர் மற்றும் தனியார் தொழில் குழும நிறுவனங்களைச் சார்ந்தோர் உணவு பதன்படுத்துதல், தென்னை மற்றும் தென்னை நாறு சார்ந்த பொருட்கள், வேளாண் பொறியியல், வாழை நார் பொருட்கள், அங்கக முறையில் காய்கறிகள் மற்றும் பழங்கள் உற்பத்தி, சேமிப்பு கிடங்கு, கோழிக்கழிவுகளிலிருந்து பையோகேஸ் மற்றும் மின்சாரம் தயாரித்தல், ஆடைகளுக்கான அங்கக சாயங்கள் தயாரித்தல், ஏரோபோனிக்ஸ் முறையில் அங்கக காய்கறிகள் மற்றும் பழங்கள் உற்பத்தி போன்ற தொழில்களில் ஈடுபட்டுள்ளனர்.

சிண்டிகேட் வங்கியின், பிராந்திய அலுவலகம் இக்காப்பகத்தின் உறுப்பினராக உள்ளார்கள். அவர்கள் தொழில் நுட்ப வணிக உறுதுணை மையமத்தைச் சேர்ந்த 8 உறுப்பினர்களுக்கு சுமார் 4.5 கோடி ரூபாய் தொழில் கடனளிக்க ஒப்புதலாணை அளித்துள்ளனர். இத்தொழில் கடனை பெறும் வேளாண் வணிக மேம்பாட்டு உறுப்பினர்களுடன், சிண்டிகேட் வங்கியின் கோவை பிராந்திய மேலாளர் திரு. T. மோகன்ராஜன் மற்றும் வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககத்தின் இயக்குனர் முனைவர். ரா. முருகேசன் கடந்த 7-3-2016 அன்று தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணை வேந்தர் முனைவர். கு. இராமசாமி அவர்களைச் சந்தித்து வேளாண் வணிக வளர்ச்சிக்கு தேவையான ஆலோசனைகளை பெற்றனர்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்